V11Acc

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

- - - - -

# வகுப்பு 11

கால அளவு : 3 மணிநேரம் **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள் : 90

## பகுதி-I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **20×1=20**

1) குறிமுறைகள் மற்றும் நிரல்கள் எழுதுபவர்கள் பின்வருமாறு அழைக்கப்படுகின்றனர்.
அ) அமைப்பு பகுப்பாய்வாளர்கள் ஆ) அமைப்பு வடிவமைப்பாளர்கள்
இ) அமைப்பு இயக்குபவர்கள் ஈ) அமைப்பு நிரலாளர்கள்

2) வெளியீட்டு சாதனத்திற்கான ஒரு உதாரணம்.
அ) சுட்டி ஆ) அச்சுப்பொறி இ) ஒளியியல் வருடி ஈ) விசைப்பலகை

3) பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது
அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

4) வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.
அ) வணிகத் தனித்தன்மை கருத்து ஆ) நிறுவனத் தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

5) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது
அ) இலாப நட்டக் கணக்கின் வரவு பக்கம்
ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கம்
இ) மேற்கண்ட இரண்டிலும்
ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6) உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும்?
அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்
இ) பொறுப்புக்கள் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

7) கணக்கியல் சமன்பாடு குறிப்பது
அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது
ஆ) வியாபாரத்தின் பொறுப்புக்கள், சொத்திற்கு சமமானது
இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது
ஈ) வியாபாரத்தின் சொத்துக்கள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

8) உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்புக் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு

9) ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

10) பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்
அ) குறிப்பேடு ஆ) நாளேடு
இ) இருப்பாய்வு ஈ) இருப்பு நிலைக்குறிப்பு

11) இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர் ________.
அ) நிலையான சொத்து ஆ) நடப்புச் சொத்து
இ) கற்பனைச் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

12) எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்?
அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல்
ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள்முதல்
இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்
ஈ) சொத்தினை இடாப்பு பெற்ற நாள் முதல்

www.Padasalai.Net

13) கொள்முதல் ஏட்டின் மொத்தத்தொகை அதிகமாக கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது கீழ்க்கண்டவற்றில் எந்த கணக்கைப் பற்று வைக்க வேண்டும்

அ) கொள்முதல் கணக்கு ஆ) அனாமத்துக் கணக்கு

இ) கடனீந்தோர் கணக்கு ஈ) மேற்கண்ட ஏதும் இல்லை

14) பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?

அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது

ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது

இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை

ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

15) ரொக்க ஏடு ஒரு

அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு

இ) உரிய குறிப்பேடு ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

16) விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?

அ) அனைத்து சரக்குகளின் விற்பனை

ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

17) தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது கீழ்க்கண்ட முறைகளில் எது சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்?

அ) நேர்க்கோட்டு முறை ஆ) குறைந்து செல் இருப்பு முறை

இ) ஆண்டுத்தொகை முறை ஈ) காப்பீட்டு முன்மை முறை

18) வங்கி வைப்புக்கள் மீதான வட்டி

அ) முதலின வரவு ஆ) வருவாயின வரவு

இ) முதலினச் செலவு ஈ) வருவாயினச் செலவு

19) ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம் எடுத்தெழுதப்படுவது

அ) கொள்முதல் கணக்கின் பற்று பக்கம் ஆ) விற்பனை கணக்கின் பற்று பக்கம்

இ) கொள்முதல் கணக்கின் வரவு பக்கம் ஈ) விற்பனை கணக்கின் வரவு பக்கம்

20) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்துகிறது?

அ) வாராக்கடன் - கடனீந்தோர் ஆ) தேய்மானம் - வியாபாரக் கணக்கு

இ) இந்திய வருமான வரிச் சட்டம் - 1961 ஈ) இறுதி சரக்கிருப்பு- இலாப நட்டக்கணக்கு

## பகுதி-II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**

**வினா எண்.30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) மதியோட்டுக் குறிமுறை என்றால் என்ன?

22) சரிகட்டுப் பதிவுகள் என்றால் என்ன?

23) கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.

24) இடாப்பு என்றால் என்ன?

25) சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?

26) ஒரு நிறுவனம் 1.1.2017 அன்று ₹ 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம். 10 ஆண்டுகள் மற்றும் அதன் இறுதி மதிப்பு ₹ 10,000. ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அதன் தேய்மானத்தொகையை நேர்கோட்டு முறையில் கணக்கிடவும்.

27) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (1.1.2016) | 10,000 |
| கொள்முதல் | 26,100 |
| விற்பனை | 40,600 |
| இறுதிச் சரக்கிருப்பு (31:12.2016) | 13,500 |

28) பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றை திருத்தம் செய்யவும்.

அ) கட்டடம் மீதான தேய்மானம் ₹ 5,000 தேய்மானக் கணக்கில் எடுத்தெழுதப்படவில்லை.

www.Padasalai.Net

ஆ) வெங்கட்டுக்கு ₹2,000 கூலி செலுத்தியது, கூலிக் கணக்கில் இருமுறை எடுத்தெழுதப்பட்டுள்ளது.

29) கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா, அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

i) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை

ii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு

30) கடனீந்தோரான கீர்த்தனாவிற்கு ₹4,800 கொடுத்து ₹5,000 க்கான கணக்கு தீர்க்கப்பட்டது - குறிப்பேட்டுப் பதிவு தருக.

## பகுதி-III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**

**வினா எண்.40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.

32) பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்?

33) இரட்டைப்பதிவு முறை என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.

34) பேரேட்டுக் கணக்கின் இருப்புக்கட்டுதலின் வழிமுறையை விளக்குக.

35) கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புக்கள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக

i) வெளித்தூக்குக்கூலி ii) கூலி iii) வாடகை பெற்றது

iv) முதல் v) விற்பனை vi) விற்பனை திருப்பம்

36) பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

2017

ஜன 1 அன்புவிற்கு கடனுக்கு விற்றது ரீம் ஒன்று ₹150 வீதம் 20 ரீம்கள் வெள்ளைத் தாள்

ஜன 2 ஜெகதீஷ் நிறுவனத்திற்கு ஒரு டஜன் ₹360 வீதம் 6 டஜன்கள் எழுதுகோல் கடனுக்கு விற்றது

ஜன 10 பழைய செய்தித்தாளை ரொக்கத்திற்கு விற்றது ₹620

Jan 15 இளங்கோவிற்கு கடனுக்கு விற்றது ஒன்று ₹170 வீதம் 10 ஓவிய அட்டைகள்

ஜன 20 கனி விற்பனையகத்திற்கு ஒன்று ₹1,520 வீதம் 4 எழுது மேசைகளை ரொக்கத்திற்கு விற்றது.

37) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு சைமன் நிறுவனத்தின் 2018 மார்ச் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயாரிக்கவும்:

அ) வங்கி அறிக்கையின்படி பற்றிருப்பு ₹ 2,500

ஆ) செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ₹ 10,000

இ) இணைய வங்கி மூலம் செலுத்திய தொகை ₹ 2,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை

38) ஜனவரி 1 2015, அன்று ₹4,00,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. ₹15,000 நிறுவுதல் செலவர்கவும், ₹10,000 வண்டிக் கட்டணமாகவும் செலவழிக்கப்பட்டது. நேர்க்கோட்டு முறையில் ஆண்டுதோறும் 10% தேய்மானம் நீக்க வேண்டும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ல் முடிக்கப் பெறுகின்றன. முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இயந்திரத்தின் மீதான தேய்மானத் தொகையைக் கணக்கிடவும்.

39) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து விற்பனைத் தொகையை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 30,000 |
| நிகர கொள்முதல் | 2,00,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| விற்பனையில் மொத்த இலாபு விகிதம் | 30% |

40) வாராக்கடன் என்றால் என்ன? அதற்கான சரிகட்டுப் பதிவுகள் தருக.

www.Padasalai.Net

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

(i) அன்பு ரொக்கம் ₹20,000; சரக்குகள் ₹12,000 மற்றும் இயந்திரம் ₹8,000த்துடன் தொழில் தொடங்கினார்.

(ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹7,000

(iii) ரமணிக்கு ₹6,900 கொடுத்து கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது.

(iv) ₹5,400 மதிப்புள்ள சரக்குகள் கடனுக்கு இராஜனுக்கு விற்கப்பட்டது ₹6,000

(v) இராஜனிடமிருந்து ₹5,800 பெற்றுக் கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது.

(vi) கொடுபட வேண்டிய கூலி ₹400

**(அல்லது)**

ஆ) மேரி என்ற அரிசி வியாபாரி கடந்த ஐந்து ஆண்டுகளாக தொழில் நடத்தி வருகிறார். அவருடைய குறிப்பேட்டில் 2018 மார்ச் மாதத்திற்கான நடவடிக்கைகளை பதிவு செய்க.

| மார்ச் | | ₹ |
|---|---|---|
| 1 | சிபி என்பவரிடமிருந்து அரிசி மூட்டைகள் கடன் கொள்முதல் செய்தது | 20,000 |
| 2 | இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது | 500 |
| 3 | சிபியிடமிருந்து வாங்கிய சரக்கு திருப்பி அனுப்பப்பட்டது | 5,000 |
| 4 | சொந்தப் பயன்பாட்டிற்காக எடுத்த அரிசி மூட்டைகள் மதிப்பு | 1,000 |
| 5 | விளம்பரக் கட்டணம் செலுத்தியது | 2,000 |
| 6 | மனோ என்பவருக்கு சரக்கு கடனுக்கு விற்றது | 20,000 |
| 7 | மனோ என்பவரால் சரக்கு திருப்பியனுப்பப்பட்டது | 5,000 |
| 8 | மனோவிடமிருந்து பெற வேண்டிய தொகை மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக பணம் பெறப்பட்டது | |

42) அ) பின்வரும் இருப்புகளிலிருந்து 2017, டிசம்பர் 31 ற்கான இலாப நட்டக் கணக்கு தயாரிக்க:

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | பெற்ற வாடகை | 2,000 |
| சம்பளம் | 18,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| அலுவலக வாடகை செலுத்தியது | 12,000 | வெளித் தூக்குக்கூலி | 2,500 |
| விளம்பரம் | 8,000 | தீக்காப்பீட்டு முனைமம் | 6,500 |

**சரிகட்டுதல்கள்:**

அ) பெற வேண்டிய வாடகை இன்னமும் பெறப்படாதது

ஆ) தீக்காப்பீட்டு முனைமம் முன்கூட்டிச் செலுத்தியது

இ) மேலாளருக்கான கழிவு, அக்கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% அனுமதிக்கவும்.

**(அல்லது)**

ஆ) பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்:

(i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹10,00,000

(ii) அறைகலன் பழுதுபார்த்தது ₹50,000

(iii) கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ₹80,000

(iv) பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ₹4,00,000

(v) புதிய பொருளை அறிமுகப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட விளம்பரச் செலவுகள் ₹10 கோடி

43) அ) ஏப்ரல் 1, 2015 அன்று ஒரு நிறுவனம் ₹50,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. அதன் வாழ்நாள் 6 ஆண்டுகள் குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 30% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31-ல் முடிக்கப் பெறுகின்றன. ஏப்ரல் 1, 2015 முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு தயாரிக்கவும்.

**(அல்லது)**

www.Padasalai.Net

ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் ஐந்தினைத் தருக.

44) அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

2017

நவ. 1 கையிருப்பு ரொக்கம் ₹ 1,00,000
வங்கியிருப்பு ரொக்கம் ₹ 30,000

நவ. 2 B என்பவருக்கு சரக்கு விற்று உடன் காசோலை பெறப்பட்டு வங்கியில் செலுத்தப்பட்டது ₹ 25,000

நவ. 4 கழிவு பெற்றது ₹ 5,000

நவ. 8 காப்பீட்டு முனைமத்தை வங்கி நேரடியாகச் செலுத்தியது ₹ 15,000

நவ. 15 வங்கியில் ரொக்கம் செலுத்தியது ₹ 30,000

நவ. 20 சொந்த செலவுகளுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 45,000

(அல்லது)

ஆ) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தவும்.

அ) இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ₹ 2000 கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஆ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 1000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

இ) ₹ 200-க்கு சரக்கு கொள்முதல் செய்தது கொள்முதல் கணக்கில் ₹ 2000 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

ஈ) விற்பனை ஏட்டில் ₹ 1,500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

உ) முகிலுக்கு ரொக்கம் ₹ 2,800 செலுத்தியது அகில் கணக்கில் ₹ 2,000 என பற்று வைக்கப்பட்டுள்ளது.

45) அ) பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவு செய்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

2017

ஆக. 1 இடாப்பு எண் 68ன் படி, செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 20,500

ஆக. 4 இடாப்பு எண் 74ன் படி, மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 12,800

ஆக. 7 இடாப்பு எண் 78ன் படி, கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 7,500

ஆக. 15 வரவுக்குறிப்பு 7ன் படி, செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு ₹ 1,500 -க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை

ஆக. 20 செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 13,300

ஆக. 25 வரவுக்குறிப்பு 11ன் படி, மாதவன் திருப்பிய சரக்கு ₹ 1,800-க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை

(அல்லது)

ஆ) கீழ்க்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு குணசேகரன் அவர்களின் முப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| ஜன. 1 | ரொக்க இருப்பு | 50,000 |
| 1 | வங்கி இருப்பு | 90,000 |
| 2 | ரோகினி என்பவருக்கு கடனுக்குச் சரக்கு விற்றது | 15,000 |
| 5 | ரோகினியிடமிருந்து ₹ 14,500க்கான காசோலைப் பெறப்பட்டு அவர் கணக்கு தீர்க்கப்பட்டது. அக்காசோலை உடனே வங்கியில் செலுத்தப்பட்டது | |
| 6 | ரொக்கம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கியில் பணம் செலுத்தியது | 18,000 |
| 7 | ஸ்ரீதருக்கு விற்ற சரக்கு ₹ 12,000 அவர் ₹ 11,800 எடுப்பு அட்டை மூலம் செலுத்தி கணக்கு தீர்த்துக் கொண்டார். அவர் பெற்ற தள்ளுபடி ₹ 200 | |
| 10 | வங்கியிலிருந்து அலுவலகச் செலவுகளுக்காக பணம் எடுத்தது | 2,000 |
| 12 | ராஜா என்பவரிடமிருந்து சரக்கு வாங்கியது ₹ 10,000 ₹ 9,800 கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டு கணக்குத் தீர்க்கப்பட்டது. அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி ₹ 200 | |

www.Padasalai.Net

14 நதியா தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் மூலம் அனுப்பியது 18,000

27 ரோகினியின் காசோலை மறுக்கப்பட்டது

46) அ) 2017, டிசம்பர் 31 ஆம் நாளன்று கீழ்க்கண்ட சரிகட்டுதல்களுக்குத் தேவையான சரிகட்டுப்பதிவுகள் தருக.

(i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 1,200

(ii) கொடுபட வேண்டிய வாடகை ₹ 300

(iii) முன் கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ₹ 450

(iv) முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ₹ 400

(v) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ₹ 200

**(அல்லது)**

ஆ) இராமலிங்கம் என்பவரின் 2017 ஜூலை மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| | | | ₹ |
|---|---|---|---|
| ஜூலை | 1 | கை ரொக்கம் | 32,000 |
| | 5 | கீர்த்தனாவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 5,000 |
| | 6 | கட்டுமச் செலவுக்காக பணம் கொடுத்தது | 300 |
| | 7 | ரொக்கக் கொள்முதல் | 12,400 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 2,600 |
| | 10 | மேலாளருக்கு சம்பளம் ரொக்கமாகத் தரப்பட்டது | 7,000 |
| | 11 | பாலா என்பவருக்கு ரொக்கம் கொடுத்தது | 3,000 |
| | 12 | போஸ் என்பவரிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 2,500 |
| | 24 | பணம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கிக்கு செலுத்திய ரொக்கம் | 4,000 |
| | 27 | வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| | 31 | அலுவலக வாடகை ரொக்கமாகச் செலுத்தியது | 6,000 |

47) அ) பியர்ல் என்ற வியாபாரியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து 31.3.2017 அன்றைய இருப்பாய்வினைத் தயாரிக்கவும்:

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 44,000 | முதலீடு மீதான வட்டி | 2,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 5,000 | சுங்க வரி | 3000 |
| கூலி | 800 | கணிப்பொறி | 20,000 |
| எடுப்புக்கள் | 4,000 | விற்பனை | 72,000 |
| கொள்முதல் | 75,000 | சரக்கிருப்பு | 10,200 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து 2016 டிசம்பர் 31-ம் நாளன்றைய ரொக்க ஏட்டின் இருப்பை கண்டறிக.

அ) வங்கி அறிக்கையின்படியான மேல்வரைப்பற்று இருப்பு ₹ 1,26,640

ஆ) வங்கி அறிக்கையில் பதியப்பெற்ற வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ₹ 3,200

இ) வங்கி அறிக்கையில் பதியப்பெற்ற மேல்வரைப்பற்று மீதான வட்டி, ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ₹ 600

ஈ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது ₹ 23,360

உ) வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படாதது ₹ 43,400

ஊ) வங்கியில் வசூலிக்கப்பட்ட முதலீடு மீதான வட்டி ₹ 24,000

----------

www.Padasalai.Net